# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


நாள்: **21.8.2014**

**பெறுநர்**
**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

ஐயா,

**பொருள் : பணியமைப்பு – நிர்வாகம் – கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கு 14.2.2014 இல் கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு பெற்றவர்களையும் பதவி உயர்வு அளிக்கும் பட்டியலில் சேர்க்கக் கோருவது – சம்மந்தமாக.**

**பார்வை :**
**1) Lr. No. 092618 / 620 / G25/G252/2014 dated 15.8.2014.**
**2) Lr. No. 072028/997/G26/G262/2012 - 8 dated 14.2.2014.**

பார்வை ஒன்றில் கண்ட தலைமை பொறியாளர் / பணியமைப்பு அவர்களின் கடிதத்தில் 413 கணக்கீட்டாளர், சூப்பர் நியூமரி கணக்கீட்டு ஆய்வாளர் ஆகியோர்களுக்கு கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு அளிக்க தகுதி காண் அறிக்கை கோரப்பட்டுள்ளது. இதை விரிவாக்கம் செய்வது சம்மந்தமாக எங்களது கருத்துக்களை தங்களது கவனத்திற்கும் உடன் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகிறோம்.

தமிழக மின் வாரியத்தில் மின் எரிப்பு கணக்கீடு அதற்குண்டான கட்டண வசூலையும் மேற்பார்வையிட்டு நிதி ஒழுகல் இல்லாமல் வருவாயை ஈட்டித் தரும் பணியை கணக்கீட்டு ஆய்வாளர்கள் செய்து வருகின்றனர் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம். இந்த கேந்திரமான பணியை செய்து வரும் கணக்கீட்டு ஆய்வாளர் பதவி 1858 பதவிகள் காலி உள்ளதாக வாரிய புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

சமீபத்தில் பார்வை ஒன்றில் கண்ட கடிதத்தின் அடிப்படையில் 413 கணக்கீட்டாளர்களையும், சூப்பர் நியூமரி கணக்கீட்டாளர்களையும் கணக்கீட்டு ஆய்வாளராக பதவி உயர்வு அளிக்க தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. தகுதி காண் அறிக்கை கேட்கப்பட்டவர்களில் சமீபத்தில் கணக்கீட்டாளராக பதவி உயர்வு பெற்றவர்களையும், கணக்கீட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கு விபரம் கேட்டு பதவி உயர்வு பட்டியலில் சேர்த்து பதவி உயர்வு வழங்குவதன் மூலம் கணக்கீட்டாய்வாளர் காலி பணி இடங்களில் ஒரு பெரும் பகுதியை நிரப்பி வாரியத்தின் வருமானத்தை உத்தரவாதப்படுத்த முடியும்.

சமீபத்தில் கணக்கீட்டாளராக பதவி உயர்வு பெற்றவர்களை கணக்கீட்டாய்வாளராக பதவி உயர்வு அளிப்பதினால், கணக்கீட்டு ஆய்வாளராக கூடுதலாக 900 எண்ணிக்கையை நிரப்புவதன் மூலம் கணக்கீட்டு பிரிவுக்காக ஒதுக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையை ஒரளவு தக்க வைத்து பணியை திறம்படச் செய்து வாரிய வருமானத்தை ஈட்டிட முடியும் என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

எனவே தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் இக்கடிதத்தின் மீது நடவடிக்கை எடுத்து மின்வாரியத்தில் உள்ள கணக்கீட்டாய்வாளர் பதவியை முழுவதுமாக நிரப்பிடும் வகையில், 5 ஆண்டுகளுக்கும் மேலாக கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் பணிபுரிந்து, கணக்கீட்டாளராக சமீபத்தில் பதவி உயர்வு பெற்றவர்களையும் இணைத்து கணக்கீட்டாய்வாளராக பதவி உயர்வு அளித்திட வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்